| | | | |
|---|---|---|---|
| Headline | MOH publishes fee benchmarks for private surgeon charges to rein in rising healthcare | | |
| MediaTitle | Tamil Murasu (Mon - Sat) | | |
| Date | 14 Nov 2018 | Color | Full Color |
| Section | Front Page | Circulation | 11,300 |
| Page No | 2 | Readership | 33,900 |
| Language | Tamil | ArticleSize | 250 cm² |
| Journalist | NULL | AdValue | S$ 1,025 |
| Frequency | Daily | PR Value | S$ 3,075 |




# தனியார் அறுவை சிகிச்சைகளுக்கு கட்டண வரையறை வழிகாட்டி அறிமுகம்

தனியார் துறையில் மேற்கொள்ளப்படும் அறுவை சிகிச்சைகளுக்கான கட்டண வரையறை வழிகாட்டியை சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. அதிகரித்து வரும் மருத்துவக் கட்டணங்களைக் கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் அண்மைய முயற்சிகளில் ஒன்றாக இந்த வழிகாட்டி இடம்பெற்றுள்ளது.

தனியார் மருத்துவத் துறையில் மேற்கொள்ளப்படும், இடுப்பு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை, பெருங் குடல் பரிசோதனை போன்ற 222 வழக்கமான அறுவை சிகிச்சைகளுக்கு கட்டண வரையறை வழிகாட்டியை இணையத் தளத்தில் நேற்று அமைச்சு வெளியிட்டது.

கட்டணை வரையறை வழிகாட்டி ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளை அமைச்சு ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து இந்தக் கட்டண வரையறை வழிகாட்டியை வெளியிடப்பட்டுள்ளது.

தனியார் சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளை வழங்குவோர் தகுந்த கட்டணங்களை நிர்ணயிக்கும் வகையில் கட்டணை வழிகாட்டிகள் வெளியிடப்பட்டுள்ளதாக குழுவின் தலைவரான டாக் லிம் யென் டெங் கூறினார்.

காப்புறுதி நிறுவனங்கள் தங்களது காப்புறுதித் திட்டங்களையும் கோரிக்கை வைக்கும் நடைமுறைகளையும் தெளிவாகவும் இலகுவாகவும் மேற்கொள்ள இந்த வழிகாட்டி உதவும்.

எனினும், சுகாதாரப் பராமரிப்பு சேவை வழங்குவோர் இந்தக் கட்டண வரையறை வழிகாட்டியைப் பின்பற்ற வேண்டிய கட்டாயமில்லை.

இந்த வரையறை அதிகமாக கட்டணம் வசூலிக்கும் மருத்துவர்கள் தேவைக்கதிகமாகக் கட்டணம் வசூலிக்கிறார் எனக் கூற முடியாவிட்டாலும், கூடுதல் கட்டணம் குறித்து சிகிச்சைக்கு முன்னதாக நோயாளியிடமும் காப்புறுதி நிறுவனத்திடமும் விளக்க வேண்டும்.

மருத்துவர்களுக்கும் நோயாளிகளுக்கும் இடையே நம்பிக்கையை வளர்க்க இந்தக் கட்டண வழிகாட்டிகள் உதவும் என்று சிங்கப்பூரின் தனியார், பொதுத் துறைகளைச் சேர்ந்த பெரும்பாலான மருத்துவர்களைப் பிரதிநிதிக்கும் சிங்கப்பூர் மருத்துவர் சங்கம் கூறியது.

கட்டண வரையறை வழிகாட்டியை நிபுணர்கள், ஒழுங்குமுறை கண்காணிப்பு அமைப்புகள், தனியார் மருத்துவமனைகள், காப்புறுதி நிறுவனங்கள் அனைத்தும் வரவேற்றுள்ளன.

கட்டணத்தில் அதிக வெளிப்படைத் தன்மை நோயாளிகள் மருத்துவ சிகிச்சையைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க இது உதவும் என அவர்கள் கூறினார்.

Powered by: isentia

## VALUATOR

| Company(Brand) | Mention | Tone | ROI |
|---|---|---|---|
| Ministry of Health - General Mention (MOH - Statutory Boards) | 1 | 0 | S$ 0 |
| Ministry of Health - Healthcare Finance (MOH - Crowdfunding for | 1 | 0 | S$ 0 |
| Ministry of Health - Healthcare Finance (MOH - Hospital Charges | 1 | 0 | S$ 0 |
| Ministry of Health (MOH) (Healthcare Industry News) | 1 | 0 | S$ 0 |
| Ministry of Health (MOH) (Ministry of Health (MOH)) | 1 | 0 | S$ 0 |
| Public Service Transformation (Public Service Transformation) | 1 | 0 | S$ 0 |
| Singapore Medical Association Pte Ltd (SMA) (Singapore Medical | 1 | 0 | S$ 0 |

## GIST(ENGLISH)

**N/A**